## 30.06.2023 ஆம் தேதிய ஒத்திவைக்கப்பட்ட பொருள்

### பொருள் எண்.1

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் TN 74 V 3530 கடந்த 30/11/2005-ல் வாங்கப்பட்டு, 17 வருடங்கள் ஆகின்றது. மேற்படி வாகனம் தற்போது வரை 3,60,729 கி.மீ தூரம் ஓடியுள்ளது. மேலும் மேற்படி ஈப்பு வாகனத்தில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு வருவதால், அலுவலக பணியாக மேற்கொள்ளும் பயணங்களுக்கு போதிய வாகனம் இல்லாமல் மிகுந்த சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே அலுவலக பணிகளில் ஈப்பு வாகனத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, புதியதாக ஒரு ஈப்பு வாகனத்தை கொள்முதல் செய்வதற்கும் அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறத.

**அ.கு**

1. Mahindra & Mahindra வின் B6(O), BS -V1 மாடல் வாங்க ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கண்ட வாகனம் கொள்முதல் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5030/2010/இ1

தீர்மானம் எண்.574 ஒத்திவைத்த தீர்மானம் ரத்து செய்யப்பட்டது.

## 31.07.2023 ஆம் தேதிய சாதாரணக்கூட்ட பொருள்கள்

### பொருள் எண்.1

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத் தலைவர், துணைத்தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்க தெரிவித்து வரப்பெற்ற அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 13.07.2023 மன்றத்தின் பார்வைக்கு

அ.கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்00843/2023/பி1

தீர்மானம் எண்.575 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக பதிவு செய்யப்பட்டது.

பொருள் எண்.2

குளச்சல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட அனுமதி வழங்கப்படும் கட்டிடங்களுக்கு கட்டிட அனுமதிக்குரிய கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டியுள்ளது. மேலும், நகரமைப்பு பிரிவு தொடர்பான இதர இனங்களுக்கு கீழ்கண்டவாறு கட்டண விகிதங்கள் மாற்றியமைக்க வேண்டியுள்ளது. ஏனவே புதிய கட்டண விகிதத்தின்படி கட்டணங்கள் வசூலிக்கவும், புதிய கட்டண விகிதத்தினை நாளிதழில் பிரசுரம் செய்யவும், மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் அதற்குரிய உத்தேச செலவுத்தொகை ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | த.மா.ந. உ அமைப்பு கள் சட்டம் 1998–ன் பிரிவு | விவரம் | அளவு விகிதம் | புதிய கட்டணம் (ரூ.) | கால அளவு | ஒரு முறை புதுப்பிக்க கால நீட்டிப்பு 3ஆண்டுகளுக் கான கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | 120 | 1) மனைப்பிரிவு அனுமதி வழுங்குதல், புதிய தெருக்கள் அமைக்க | ஒவ்வொரு 1 ஹெக்டருக்கு அதன் பாகத்திற்கும் | ரூ.10000 | ஒரு தடவை | ஒருமுறை மட்டும் |
| 2 | 123 | 1. மத சம்பந்தமான கட்டிடங்களின் முன்னால் விஷேச நாட்களில் அமைக்கப்படும் தற்காலிக பந்தல்களுக்கு | 10.ச.மீக்கு இலவசம். மேற்படும் 10 ச.மீக்கும் அதன் பாகத்திற்கும் | ரூ.150.00 | ஒரு மாதம் | ஒருமுறை மட்டும் |
| | | 2. திருமண மண்டபங்கள் தனியார் கட்டடங்களுக்கு முன்னால் அமைக்கப்படும் தற்காலிக பந்தல்கள் ஆகியவற்றிற்கு (விசேச நாட்களில் மட்டும்) | 10 ச.மீக்கும் அதன் பாகத்திற்கும் | ரூ.250.00 | ஒரு நாள் | ஒருமுறை மட்டும் |
| | | 3) கோடைகால பந்தல்கள் அமைப்பதற்கு. (குறிப்பு போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லா இனங்களுக்கு மட்டும்) | 10.ச.மீ வரை இலவசம். மேற்படும் 10 ச.மீக்கும் அதன் பாகத்திற்கும் | ரூ.100.00 | மார்ச் முதல் மே 31 வரை | ஒருமுறை மட்டும் |
| 3 | 117 (S) | நகராட்சி பகுதிகளில் படப்பிடிப்பு நடத்த | | ரூ.2000 | ஒரு நாள் | ஒரு தடவை மட்டும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் மற்றும் கட்டிடங்களில் படப்பிடிப்பு நடத்த | | ரூ.3000 | ஒரு நாள் | ஒரு தடவை மட்டும் |
| | | நகர்மன்றத்திற்கு சொந்தமான கட்டிடங்கள் மற்றும் இடங்களில் எழுத்து மூலமும் போர்டு மூலமும் (பேருந்து நிலையம் நீங்கலாக) விளம்பரங்கள் செய்ய | ஒவ்வொரு 10.00 ச.மீக்கும் அதன் பாகத்திற்கும் | ரூ.2000 | 1 வருடம் | இல்லை |
| | | மேற்படி பேருந்து நிலையத்தில் விளம்பரம் செய்ய | ஒவ்வொரு 10.00 ச.மீக்கும் அதன் பாகத்திற்கும் | ரூ.3000 | 1 வருடம் | இல்லை |
| | | விளம்பர ஆர்ச்சுகள் | 1 எண்ணிக்கை | 1000.00 | ஒரு வாரத்திற்கு மட்டும் | ஒரு தடைவ மட்டும் |
| | 109 | நகராட்சி இடங்கள், மற்றும் பொது இடங்களில் பொருட்காட்சி, நாடகம், சர்க்கஸ் போன்ற கேளிக்கை நிகழ்ச்சிகள் நடத்த அமைக்கப்படும் தற்காலிக பந்தல்கள், மேற்கூரைகள், கடை தடுப்புக்கள் இனங்களுக்குஅமைக்கப்படும் தற்காலிக ஆக்கிரமிப்பு இனங்களுக்கு (குறிப்பு தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு மேல் அனுமதியில்லை). | 10 ச.மீக்கும் அதன் பாகத்திற்கும் | 100.00 | ஒரு மாதம் | இல்லை |
| | 123 | நகராட்சி தெரு ஓரங்களில் கட்டிடச் சாமான்கள் செங்கல் போன்றவைகள் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் வைக்க | 10 ச.மீக்கும் அதன் பாகத்திற்கும் ( உத்தேச கட்டிடத்தின் பரப்பளவில்) | 200.00 | ஒரு தடவை | 200.00 |
| | 137(B) | மழை நீர் சேகரிப்பு தொட்டி கட்ட வைப்புத் தொகை | குடியிருப்பு கட்டிடம் | 2000 | ஒரு தடவை | இல்லை |
| | | | குடியிருப்பு அல்லாதது | 3000 | ஒரு தடவை | இல்லை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | நீச்சல் குளம் அமைத்தல் | குடியிருப்பு கட்டிடம் | 3000 | ஒரு தடவை | இல்லை |
| | | | குடியிருப்பு அல்லாதது | 15000 | ஒரு தடவை | இல்லை |
| 4 | 133 | 1. குடிசை நீங்கலாக கட்டிடங்கள் கட்டுவதற்கு எந்த மனை இடத்தையும் அங்கீகரிக்க (Site Approval) | 200.சமீ வரை<br>200 .சமீ க்கு மேல்400 ச.மீ வரை<br>400 ச.மீட்டருக்கு மேல் | 500<br>1000<br>2000 | 5 ஆண்டுகள் | ஒரு தடவை மட்டும் |
| | 133 | 2.குடிசை நீங்கலாக ஏனைய கட்டிடங்கள் (தார்சு) கட்டவோ கூடுதலாக அனுமதி வழங்க போன்றவை சேர்ந்த (குடியிருப்புகளுக்கு) | | | | |
| | | அ) கட்டிடம்அடித்தளம் , வாகனநிறுத்தும் தளம் மற்றும் தரைதளம் | 10.சமீக்கும் அதன் பாகத்திற்கும் | 300.00 | 5 ஆண்டுகள் | 300.00 |
| | | ஆ. முதல் தளம் | 10.சமீக்கும் அதன் பாகத்திற்கும் | 400.00 | 5 ஆண்டுகள் | 400.00 |
| | | இ) இரண்டாம் தளம் | 10.சமீக்கும் அதன் பாகத்திற்கும் | 500.00 | 5 ஆண்டுகள் | 500.00 |
| | | ஈ) 3 தளம் | 10.சமீக்கும் அதன் பாகத்திற்கும் | 600.00 | 5 ஆண்டுகள் | 600.00 |
| | | உ) நான்காம் தளம் | 10.சமீக்கும் அதன் பாகத்திற்கும் | 1000.00 | 5 ஆண்டுகள் | 1000.00 |
| | | 3. குடிசை அல்லாத தகரம், எ.சி. ஷீட் கட்டிடங்கள் கட்டுதல் (குடியிருப்பு ) | 10.சமீக்கும் அதன் பாகத்திற்கும் | 200.00 | 5 ஆண்டுகள் | 200.00 |
| | | 4. குடியிருப்பல்லாத வணிக நோக்க கட்டுமானங்கள் தார்ச்சு மற்றும் தகரம், எ.சி. ஷீட் கட்டிடங்கள் கட்டுதல் | 10.சமீக்கும் அதன் பாகத்திற்கும் | 300.00 | 5 ஆண்டுகள் | 300.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ஆ) வணிக கட்டிடம், அடித்தளம் , வாகனநிறுத்தும் தளம் மற்றும் தரைதளம் ( வணிக கட்டிடம்) | 10.சமீக்கும் அதன் பாகத்திற்கும் | 500.00 | 5 ஆண்டுகள் | 500.00 |
| | | ஆ) முதல் தளம் | 10.சமீக்கும் அதன் பாகத்திற்கும் | 600.00 | 5 ஆண்டுகள் | 600.00 |
| | | இ) இரண்டாம் தளம் | 10.சமீக்கும் அதன் பாகத்திற்கும் | 800.00 | 5 ஆண்டுகள் | 800.00 |
| | | ஈ) 3ம் தளம் | 10.சமீக்கும் அதன் பாகத்திற்கும் | 1000.00 | 5 ஆண்டுகள் | 1000.00 |
| | | உ) 4ம் தளம் | 10.சமீக்கும் அதன் பாகத்திற்கும் | 1200.00 | 5 ஆண்டுகள் | 1200.00 |
| | | 5. சுற்றுசுவர்<br>அ) 1.5 மீ உயரத்திற்கு மிகாமல் | 1 மீ நீளத்திற்கு அதன் பாகத்திற்கு | 60.00 | 5 ஆண்டுகள் | 60.00 |
| | | ஆ) 1.5 மீ உயரத்திற்கு மேல் | 1 மீ நீளத்திற்கு அதன் பாகத்திற்கு | 75.00 | 5 ஆண்டுகள் | 75.00 |
| | | மனை உட்பிரிவு மற்றும் மனை ஒருங்கிணைப்பு | 200.சமீ வரை<br>200 .சமீ க்கு மேல். | ரூ. 1500.00.<br>ரூ.3000.00 | ஒரு தடவை | இல்லை |
| | | குளியலறை | 1 எண்ணிற்கு | ரூ.300 | 5 ஆண்டுகள் | ரூ.300 |
| | | கழிப்பறை | 1 எண்ணிற்கு | ரூ.300 | 5 ஆண்டுகள் | ரூ.300 |
| | | குளியலறையுடன் கூடிய கழிப்பறை | 1 எண்ணிற்கு | ரூ.300 | 5 ஆண்டுகள் | ரூ.300 |
| | | செப்டிக் டேங்க் | 1 எண்ணிற்கு | ரூ.500 | 5 ஆண்டுகள் | ரூ.500 |
| | 133 | மேல்நிலை குடிநீர் தொட்டி | 1 எண்ணிற்கு | ரூ.500 | 5 ஆண்டுகள் | ரூ.500 |
| | 164(A) | ஆழ்துளை கிணறு | 1 எண்ணிற்கு | ரூ.2000 | | ஒரு தடவை |
| | | கட்டிட இடிமான கட்டணம் | 100 ச.மீ வரை | ரூ.2000 | ஒரு தடவை | இல்லை |
| | | | 100 ச.மீக்கு மேல் | ரூ.3000 | ஒரு தடவை | இல்லை |
| | | பாதுகாப்பு வைப்புத் தொகை (கட்டிடத்தின் பரப்பளவில்) | 1 ச.மீ | ரூ.10 | 5 ஆண்டுகள் | ரூ.10 |
| | | அனுமதியின்றி கட்டிட பணி துவங்கப்பட்டால் உரிம | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 135<br>(3),(5) | கட்டணத்தில் 100 சதவீதம்<br>கூடுதல் கட்டணம் | | | | |
| | 117 | விளம்பரக் கட்டணம்<br>1) பிரதான சாலைகள் மற்றும் பேருந்து நிலையம்<br><br>2) பிறசாலைகள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான இடம் | 1 சதுர மீட்டர்<br><br>1 சதுர மீட்டர் | ரூ.100<br><br>ரூ.80 | 1 ஆண்டுக்கு<br><br>1 ஆண்டுக்கு | இல்லை<br><br>இல்லை |
| | | 3) நில வாடகை<br>அ) நகராட்சிக்கு சொந்தமான இடங்கள்<br><br>ஆ) சாலைகள் மற்றும் பிற இடங்கள் | 1 0சதுர மீட்டர்<br><br>1 0சதுர மீட்டர் | ரூ.1000<br><br>ரூ.500.00 | 1 ஆண்டுக்கு<br><br>1 ஆண்டுக்கு | இல்லை<br><br>இல்லை |
| நகராட்சி கட்டிட பட வரைவாளராக உரிமம் பெற<br>1) உரிமையாணை கட்டணம்<br>2) வைப்புத் தொகை<br>3) புதுப்பித்தல் கட்டணம் | | | 5000.00<br>5000.00<br>5000.00 | | 5 ஆண்டுகள்<br>5 ஆண்டுகள்<br>5 ஆண்டுகள் | |

அ.கு மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்.576 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண்.3

இந்நகராட்சிக்குட்பட்ட ஏ.வி.எம் கால்வாய் புல் புதர்கள் மற்றும் கழிவுகளால் தண்ணீர் Flow ஆகாமல் இருந்தது. எனவே ஏ.வி.எம் கால்வாயினை தூர் வாரி சுத்தம் செய்வதற்கு சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் மேற்படி பணிக்கு திட்ட ஆலோசகர் மூலம் விரிவான அறிக்கை தயார் செய்து நிர்வாக அனுமதி பெறுவதற்கு தெரிவிக்கப்பட்டது. மேற்படி பணிக்கு தனியார் ஆலோசகர் தேர்வு செய்யப்பட்டு பணியின் அவசியம் கருதி விலைப்புள்ளி 09.06.2023 அன்று கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | Glency Docmra Consultants India Pvt Ltd | 1.2 % |
| 2. | Max con town planning and Development Chennai | 2% |
| 3. | Eclat Designers, Chennai | 1.5% |

மேற்காணும் மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த Glency Docmra Consultants India Pvt Ltd., க்கு பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.159-1/2023/இ1

தீர்மானம் எண்.577 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண்.4

இந்நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2022-23-ன் கீழ், நகராட்சிக்குட்பட்ட தினசரி சந்தை கூடும் பகுதியின் அருகாமையில் ரூ.33.00 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு கட்டிடம் கட்டுவதை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் விரிவான அறிக்கை தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்படி பணிக்கு விலைப்புள்ளி தயார் செய்யப்பட்டு 12.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.ஜாண்றோஸ், ஒப்பந்ததார் | மதிப்பீட்டை விட 0.03% குறைவு. |
| 2. | திரு.சி.சுரேஷ் ஒப்பந்ததார் | மதிப்பீட்டு விகிதம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.ஜாண்றோஸ் அவர்கள் மதிப்பீட்டு விகிதத்தில் குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.51/2023/இ1

தீர்மானம் எண்.578 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண்.5

இந்நகராட்சி, வார்டு எண்.20-க்குட்பட்ட 1-ம் நம்பர் பகுதியில் சாலை அமைக்க வேண்டியுள்ளதால், அப்பகுதியில் உடைந்துள்ள மழை நீர் வடிகாலை சரி செய்த பின் சாலை அமைக்க நகர்மன்ற உறுப்பினர் கேட்டு கொண்டதன்படி, அப்பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் மூடு சிலாப் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7,20,000/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.808/2023/இ1

தீர்மானம் எண்.579 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண்.6

இந்நகராட்சி, வார்டு எண்.02-க்குட்பட்ட கல்லத்திவிளை பகுதியில் சாலையில் உள்ள side wall ஆனது உடைந்த நிலையில் உள்ளது. மேற்படி பகுதியில் சாலை திட்டப்பணி நடைபெறுவதால் மழைநீர் வடிகால் உயர்த்தி பழுது நீக்கம் செய்ய வேண்டியுள்ளது. எனவே கல்லத்திவிளையில் தடுப்பு சுவர் மற்றும் செட்டிய தெரு நடுத்தெருவில் மழை நீர் வடிகால் கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4,00,000/- ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.842/2023/இ1

தீர்மானம் எண்.580 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண்.7

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கீழ்கண்ட சேதமடைந்த சாலைகளை மறு சீரமைக்க நகர்மன்ற உறுப்பினர்கள் கோரியதன் அடிப்படையில் மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. வார்டு எண்.24-க்குட்பட்ட கடல் அரிப்பினால் சேதமடைந்த பேவர் பிளாக் சாலைகளை சரி செய்ய மேற்படி வார்டின் நகர்மன்ற உறுப்பினர் திரு.பனிகுருசு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

2. வார்டு எண்.7-க்குட்பட்ட நரிக்கல் முதல் காமராஜர் சாலை வரை உள்ள சேதமடைந்த சாலைகளை சரி செய்ய மேற்படி வார்டின் நகர்மன்ற உறுப்பினர் திருமதி.T.தனலெட்சுமி அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.
3. வார்டு எண்.6-க்குட்பட்ட காமராஜர் சாலை முதல் நரிக்கல் சத்துணவு கூடம் வரையிலான சேதமடைந்த சாலையை சரி செய்ய மேற்படி வார்டின் நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஷே.குறைஷா பீவி அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.
4. வார்டு எண்.16-க்குட்பட்ட செக்காலத்தெருப்பகுதிகளில் சேதமடைந்த சாலையை சரி செய்ய மேற்படி வார்டின் நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சு.அ.சுஜித்ரா அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

அ.கு தற்போது நகராட்சி பொது நிதி நிலைமை சரி இல்லாத காரணத்தினால் ஏதேனும் திட்டப்பணிகள் வரும் பட்சத்தில் மேற்கண்ட பணியினை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.842/2023/இ1

தீர்மானம் எண்.581 அலுவலக குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டது, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண்.8

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் உள்ள மண் சாலைகளை பேவர் பிளாக் சாலையாக மாற்ற நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. வார்டு எண்.16, செக்காலத் தெருவில் (சன்னதி தெரு) உள்ள மண் சாலைகளை பேவர் பிளாக் சாலையாக மாற்ற நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சுஜித்ரா அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.
2. வார்டு எண்.20, கடல் தடுப்பு சுவர் பகுதியில் கிழக்கு திசை தொடங்கி வின்செண்ட் சாலை வரையுள்ள மண் சாலையை பேவர் பிளாக் சாலையாக மாற்ற நகர்மன்ற உறுப்பினர் திரு.F.லாரன்ஸ் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.
3. வார்டு எண்.16, சன்னதி தெரு முத்தாரம் கோவில் தெரு, கொம்பன்விளை, அண்ணாசிலை ரோடு மற்றும் ஆசாரிமார் தெரு ஆகிய பகுதிகளில் மண் சாலையை பேவர் பிளாக் சாலையாக மாற்ற நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சுஜித்ரா அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

4. வார்டு எண்.14 கே.எஸ்.எஸ்.எஸ் காலனி பகுதிகளில் மண் சாலையை பேவர் பிளாக் சாலையாக மாற்ற கோரி நகர்மன்ற உறுப்பினர் திரு.A.அஜின் ரூத் அவர்களால் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.
5. வார்டு எண்.02, நாராயண நகர் கல்லத்தி சாலை ஆகிய பகுதியில் உள்ள மண் சாலையை பேவர் பிளாக் சாலையாக மாற்ற கோரி நகர்மன்ற உறுப்பினர் திரு.சி.சுரேஷ் குமார் அவர்களால் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.
6. வார்டு எண்.24, பெரிய நாயகி காலனி முதல் கடற்கரை சாலை வரையிலும், கொட்டில்பாடு குருசடி பகுதியிலும் மண் சாலையை பேவர் பிளாக் சாலையாக மாற்ற கோரி நகர்மன்ற உறுப்பினர் திரு.ப.பனிகுருசு அவர்களால் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.
7. வார்டு எண்.03 தொலைபேசி நிலைய ரோடு, தெற்கு கள்ளியடைப்பு, சாஸ்தான்கரை மெயின் ரோடு, ஜெயபால் காம்பவுண்ட், வலியவிளை, அரசு நடுநிலைப்பள்ளி பின்புறம் ஆகிய பகுதிகளில் மண் சாலையை பேவர் பிளாக் சாலையாக மாற்ற கோரி நகர்மன்ற உறுப்பினர் திரு.S.ரமேஷ் அவர்களால் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.
8. வார்டு எண்.01 தைநாத்தன்கரை, நரிக்கல் முதல் வெள்ளியாகுளம் வரை, நரிக்கல் நவீன பூங்கா, ஓரியன்ட் பள்ளிக்கூடம் முன்பகுதி, சிங்கன்காவு முதல் நரிக்கல் வரை, கேஸ் குடோன், சாஸ்தான்கரை பள்ளி மற்றும் சிங்கன் காவு நவீன பூங்கா ஆகிய பகுதிகளில் மண் சாலையை பேவர் பிளாக் சாலையாக மாற்ற கோரி நகர்மன்ற உறுப்பினர் திருமதி.S.ஷீலா ஜெயந்தி அவர்களால் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.
9. வார்டு எண்.23, மரமடி தெருப் பகுதிகளில் உள்ள மண் சாலையை பேவர் பிளாக் சாலையாக மாற்ற கோரி நகர்மன்ற உறுப்பினர் திரு.அ.ஜாண் பிரிட்டோ அவர்களால் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.
10. வார்டு எண்.18, முகைதீன் பள்ளி தெரு, இலப்பவிளை தெரு, பந்தவிளை ஆகிய பகுதிகளில் புதியதாக பேவர் பிளாக் சாலை அமைக்க நகர்மன்ற உறுப்பினர் திருமதி.எஸ்.ஷீனத் பாத்திமா கோரிக்கை விடுத்துள்ளார்.
11. வார்டு எண்.12, தும்பக்காடு முதல் பர்னட்டிவிளை வரை உள்ள பகுதியில் மண் சாலையை பேவர் பிளாக் சாலையாக மாற்ற நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ச.சஜீலா கோரிக்கை விடுத்துள்ளார்.
12. வார்டு எண்.4. குளச்சல் சாஸ்தான்கரை மெயின் ரோடு, புதுத்தெரு பிருந்தா கேட்டரிங், வலியவிளை, திங்கள் நகர் மெயின் ரோடு ஆகிய பகுதிகளில் உள்ள மண் சாலையை பேவர் பிளாக் சாலையாக மாற்ற நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கா.செல்வகுமார் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.
13. வார்டு எண்.15, சீம்பிளிவிளை, வான்மலர் காலனி, ஆசாத் நகர், வடக்கு குறுக்கு தெரு மற்றும் ஆசாத் நகர், குழந்தை யேசு காலனி ஆகிய பகுதிகளில் உள்ள மண் சாலையை பேவர் பிளாக் சாலையாக மாற்ற

நகர்மன்ற உறுப்பினர் திரு.A. அப்துல் ரஹீம் அவர்கள் கோரிக்கை விடுத்தள்ளார்.

14. வார்டு எண்.13, பர்னட்டிவிளை, சி.எம்.சி காலனி ஆகிய பகுதிகளில் மண் சாலையை பேவர் பிளாக் சாலையாக மாற்ற நகர்மன்ற உறுப்பினர் திருமதி.P.சந்திர வயோலா அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.
15. வார்டு எண்.06, காமராஜர் சாலை, வண்ணாத்திவிளை பகுதிகளில் மண் சாலையை பேவர் பிளாக் சாலையாக மாற்ற நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஷே.குறைஷா பீவி அவர்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

**அ.கு** மேற்காணும் சாலைகள் நகராட்சிக்கு சொந்தமானதா அல்லது தனியாருக்கு சொந்தமானதா என நகரமைப்பு அலுவலர் மூலம் ஆய்வு செய்து பின்னர் சாலைகளை அளவீடு செய்து, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி சாலைப்பதிவேட்டில் பதிவு செய்ய அனுமதி பெற்று மேற்காணும் சாலைகளை தார் சாலையாவும், பேவர் பிளாக் சாலையாகவும் மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

ந.க.எண்.792/2023/இ1

தீர்மானம் எண்.582 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டது, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண்.9

இந்நகராட்சியில் 15-வது நிதிக்குழுவின் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் 19731/2023/CFC-1 ன் படி, புதியதாக நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் KSSS காலனியில் குடிநீர் நீர்த்தேக்க தொட்டி அமைந்துள்ள

பகுதியில் அமைக்க விரிவான திட்ட கருத்துரு 26.06.2023-க்கு முன் அனுப்ப கேட்டுள்ளதன் படி அனுப்பப்பட்டது. மேற்படி பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதத்தின்படி 17.07.2023-ல் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.624/2023/இ1

தீர்மானம் எண்.583 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு,ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு கண்காணிப்பு வாகனம் TN 75 K 6526 இழுவை இல்லாமல் ஏற்றம் ஏற இயலாத காரணத்தினால் பணியை அவசர பணியாக மேற்கொள்ள வேண்டிய காரணத்தால், அனுமதி பெற்று உள்ளூர் பணிமனையில் வைத்து பழுதுகள் சரிசெய்யப்பட்டு நன்றாக இயங்கி கொண்டிருக்கிறது. இதற்கான செலவு தொகை ரூ.5900/- ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து சம்மந்தப்பட்ட ஓட்டுநருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.7057-1/2011/இ1

தீர்மானம் எண்.584 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு,ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண்.11**

இந்நகராட்சிக்குட்பட்ட குடிநீர் வினியோகப் பணிகளை மேற்கொள்வதற்கு ம.தீ.எண்.441, நாள் 30.03.2023-ன் படி, 7 எண்ணம் தினக்கூலி பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்த திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் காணொளி காட்சி மூலம் நடத்திய ஆய்வு கூட்டத்தின் படி (03.07.2023) கூடுதலாக குடிநீர் பணிகளுக்கு 4 எண்ணம் பணியாளர்கள் அமர்த்த வேண்டியுள்ளதால் அவரச அவசியம் கருதி 03.07.2023 அன்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி ஒப்பந்ததாரர் மூலம் பணியின் மதிப்பீட்டுத் தொகைக்குள்ளேயே தினக்கூலி பணியாளர்களை அமர்த்தி உத்தரவு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்.263/2023/இ1

தீர்மானம் எண்.585 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு,ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.12**

இந்நகராட்சிக்குட்பட்ட 2-வது வார்டு கார்மல் ஜோதி பள்ளிக்கூடம் எதிர்புறத்தில் ஜிம் அமைந்துள்ள பகுதியில் பகிர்மான குழாய் இல்லாத காரணத்தால் மேற்படி வார்டின் நகர்மன்ற உறுப்பினர் பகிர்மான குழாய் அமைக்க கோரியதன்

அடிப்படையில் பகிர்மான குழாய் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 2,50,000/-ஐ குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.848/2023/இ2

தீர்மானம் எண்.586 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு,ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.13

இந்நகராட்சிக்குட்பட்ட 7-வது வார்டு காமராஜ் சாலை முதல் நரிக்கல் வரை குடிநீரின் Pressure குறைவாக இருப்பதாக மேற்கண்ட வார்டின் நகர்மன்ற உறுப்பினர் திருமதி.தனலெட்சுமி மற்றும் பொது மக்கள் கோரியதன் அடிப்படையில் மேற்கண்ட பகுதியில் குடிநீர் வினியோகம் பார்வையிடப்பட்டதில், பொது மக்கள் நலன் மற்றும் குடிநீரின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே உள்ள 2” PVC பகிர்மான குழாயை மாற்றி 3” PVC பகிர்மான குழாய் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3,35,000/-ஐ குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.845/2023/இ2

தீர்மானம் எண்.587 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு,ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.14

இந்நகராட்சிக்குட்பட்ட 24-வது வார்டு கொட்டில்பாடு கடற்கரை அருகில் உள்ள பேவர் பிளாக் சாலையின் நடுவில் இடையூறாக உள்ள மின்கம்பத்தை மாற்ற 24-வது வார்டின் நகர்மன்ற உறுப்பினர் திரு.ப.பனிகுருசு கோரியதன் அடிப்படையில் மேற்கண்ட மின்கம்பத்தை மாற்றுவதற்கும் அதற்கான மதிப்பீட்டு கட்டணத்திற்கான Demand தமிழ்நாடு மின் வாரியத்தில் இருந்து கிடைக்கப்பெற்றவுடன் தொகை செலுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.4378/2010/இ2

தீர்மானம் எண்.588 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு,ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.15

இந்நகராட்சிக்குட்பட்ட 16-வது வார்டு தும்பக்காடு பகுதியில் FII/6-ல் மின் விளக்கு இல்லாத காரணத்தால் மிகவும் இருட்டாகவும், மக்களுக்கு நடந்து

செல்வதற்கு அச்சுறுத்தலாகவும் இருப்பதாக மேற்கண்ட வார்டின் நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சுஜித்ரா தெரிவித்ததன் அடிப்படையில் மேற்கண்ட மின்கம்பத்தில் மின்விளக்கு அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் ஆசாரிமார் தெரு, அங்கன்வாடி அருகில் உள்ள மின் கம்பத்தில் (மி.க.எண். FI/6) மின் விளக்கு அமைக்க நகர்மன்ற உறுப்பினர் கோரியதன் அடிப்படையில் மேற்கண்ட பகுதியில் மின் விளக்கு அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.இ2/4378/2010

தீர்மானம் எண்.589 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு,ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.16

இந்நகராட்சிக்குட்பட்ட 20-வது வார்டு துறைமுகத்தெரு எண்.1 பகுதியில் பொதுமக்களுக்கு விளையாட்டு மைதானத்திற்கு இடையூறாக உள்ள மின் கம்பத்தை மாற்ற 20-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.லாரன்ஸ் மற்றும் 14 உறுப்பினர்கள் கோரியதன் அடிப்படையில் மின்கம்பத்தை மாற்றவும் மேலும் அதற்கான மதிப்பீட்டு கட்டணத்திற்கான Demand மின் வாரியத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற உடன் உரிய தொகையை செலுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.இ2/4278/2011

தீர்மானம் எண்.590 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு,ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

## பொருள் எண்.17

இந்நகராட்சிக்குட்பட்ட ஆசான் தெருவில் க.எண்.30-143A முதல் க.எண்.30-52 வரை உள்ள பகுதியில் உள்ள பொது மக்கள் புதிய குடிநீர் குழாய் இணைப்பு கோரி மனு செய்த வண்ணம் உள்ளனர். ஆனால் மேற்கண்ட பகுதியில் பகிர்மான குழாய் இல்லாத காரணத்தால் புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்க முடியாத சூழ்நிலை உள்ளது. மேலும் தற்போது நகர்மன்ற தலைவர் மேற்கண்ட பகுதியில் பகிர்மான குழாய் அமைக்க கோரியதன் அடிப்படையில் பகிர்மான குழாய் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,10,100/-ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.849/2023/இ2

தீர்மானம் எண்.591 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு,ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண்.18**

இந்நகராட்சிக்குட்பட்ட சீம்பிளிவிளையில் உள்ள Bore No.20-க்குரிய Meter, Main switch மற்றும் Panel board வைத்திருக்கும் அறை மிகவும் பழுதடைந்து உள்ளே மழைநீர் விடுவதால் Main switch மற்றும் Panel board அடிக்கடி பழுது ஏற்பட்ட வண்ணம் உள்ளது. இதனால் மின் மோட்டார் அடிக்கடி இயங்காமல் மாதா காலனி மற்றும் கொட்டில்பாடு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு குடிநீர் ஏற்ற முடியாமல் குடிநீர் வினியோகம் சீராக வழங்க இயலவில்லை. எனவே மேற்கண்ட கட்டிடத்தை இடித்து விட்டு இரண்டு Bore -களுக்குரிய Meter board, Main switch மற்றும் Panel board, change over switch வைப்பதற்கு வசதியாக புதிய pump அறை கட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.65,000/-ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.847/2023/இ2

தீர்மானம் எண்.592 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு,ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண்.19**

இந்நகராட்சிக்கு சொந்தமான நவீன மீன்சந்தை தரை தளம் கடை எண்.5 (வரிவிதிப்பு எண்.148/2017003)-ஐ திருமதி.ஜெசி ஜெனட் என்பவர் மாத வாடகை ரூ.6555/-க்கு எடுத்துள்ளார். குத்தகை காலம் 01.07.2020 முதல் 30.06.2023 உடன் ஆறு ஆண்டுகள் முடிவடைந்து விட்டது. குத்தகைதாரர் மேலும் மூன்றாண்டுகளுக்கு உரிமம் நீட்டிப்பு வழங்கவும், அதற்கான கட்டணமும் செலுத்தி உள்ளார்

எனவே மேற்படி கடைக்கு குத்தகை தொகையில் 15% உயர்வு செய்து 01.07.2023 முதல் 30.06.2026 வரைக்கும் குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.216/2017/அ1

தீர்மானம் எண்.593 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு,ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண்.20**

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்கள். 18,19 ஆகிய கடைகளை 2018-ல் திரு.மாகின் அபுபக்கர் மாத வாடகைக்கு எடுத்துள்ளார். தற்பொழுது கடையினை தன்னால் நடத்த இயலாத காரணத்தினால் இந்நகராட்சி வசம் ஒப்படைத்துள்ளார். கடைக்கு முன்வைப்புத் தொகையாக காலங்கடந்த குத்தகை பதிவேட்டின்படி ரூ.2,67,432/- உள்ளது. இரண்டு கடைக்கும் மாத வாடகை ஏப்ரல் 2023 முதல் ஜூலை 2023 வரைக்கும் ரூ.65,136/- நிலுவையாக

உள்ளது. எனவே மேற்படி நபருக்கு முன்வைப்புத் தொகையிலிருந்து மாத வாடகை நிலுவை தொகை போக மீதமுள்ள தொகை அன்னாருக்கு (மாகின் அபுபக்கர்) வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.01/2020/அ3

தீர்மானம் எண்.594 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு,ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண்.21**

இந்நகராட்சிக்கு சொந்தமான நுண்ணுயிர் உரமாக்கும் மையத்தில் தினசரி சேகரமாகும் குப்பைகளை தயாரிக்க மக்கும் குப்பைகளை உரமாக்க தேவையான ஈட்டு பொருட்கள் ரூ.1,068/- திரு.ஆர்.ராஜ்குமார் துப்புரவு பணி மேற்பார்வையாளருக்கு வழங்கப்பட்டது. எனவே பொது சுகாதார அவசியம் கருதி, மேற்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.723/2023/எச்1

தீர்மானம் எண்.595 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு,ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண்.22**

இந்நகராட்சிக்குட்பட்ட 24-வது வார்டில் உள்ள 3 கழிவறைகளிலும் விஷ பூச்சிகளும், பாம்பும் அதிக அளவில் காணப்படுவதால் பொது மக்களுக்கு மிகுந்த இடையூறு ஏற்பட்டு வந்ததால் பொது மக்கள் நலன் கருதி கழிவறைகளை இடித்து மேற்கண்ட இடித்த பகுதியில் உள்ள மண்ணை Compost yard மற்றும் கொட்டில்பாடு கடற்கரை பகுதியில் கடல் அரிப்பால் ஏற்பட்ட பகுதியில் தட்டியதற்கான செலவுத் தொகை ரூ.33600/- மற்றும் உப்பளம் Compost yard-ல் JCB ஓடிய வகையில் ஆன செலவுத் தொகை ரூ.27500/- ஆக மொத்தம் ரூ.61,100/-ஐ பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.8513/2023/எச்1

தீர்மானம் எண்.596 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு,ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி